Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

tamilmakkalkurall@gmail.com

# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, செப்டம்பர் 05, 2024 | இதழ் 145

# டிஜிட்டல் தொழில்நுட்பம், செமிகண்டக்டர் துறைகளில் சிங்கப்பூர் பிரதமர் முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி 4 ஒப்பந்தம் கையெழுத்து

சென்னை, 05 செப் 2024: பிரதமர் மோடி, சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங் முன்னிலையில், இந்தியா - சிங்கப்பூர் இடையே டிஜிட்டல் தொழில்நுட்பம், செமிகண்டக்டர் உள்ளிட்ட துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு நாள் பயணமாக நேற்று சிங்கப்பூர் சென்ற பிரதமர் மோடி, இன்று அந்நாட்டு பிரதமர் லாரன்ஸ் வோங் உடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இரு பிரதமர்கள் இடையேயான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இரு நாடுகளின் தூதுக்குழுக்களுடன் இணைந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதையடுத்து, இரு நாடுகளுக்கு இடையே நான்கு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இரு பிரதமர்கள் முன்னிலையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் (குறைக்கடத்தி) துறை, சுகாதாரம் மற்றும் மருத்துவம், கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, சைபர்-பாதுகாப்பு, 5ஜி, சூப்பர் கம்ப்யூட்டிங், குவாண்டம் கம்ப்யூட்டிங், செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் டொமைனில் உள்ள திறமையான



தொழிலாளர்கள் ஆகியவை தொடர்பாக இரு நாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்த டிஜிட்டல் தொழில்நுட்ப ஒப்பந்தத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தம், இந்தியா-சிங்கப்பூர் இடையே செமிகண்டக்டர் (குறைக்கடத்தி) சுற்றுச்சூழலுக்கான ஒரு கூட்டாண்மையை நிறுவுகிறது. சிங்கப்பூர் நிறுவனங்கள், இந்தியாவில் செமிகண்டக்டர் துறையில் முதலீடு செய்ய இந்த ஒப்பந்தம் வழிவகை செய்துள்ளது.

சுகாதாரம் மற்றும் மருத்துவம், கூட்டு ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் மனித வள மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் சுகாதாரம் மற்றும் மருந்துத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்தும் நோக்கில், இரு நாடுகளின் சுகாதார அமைச்சகங்களுக்கிடையே மூன்றாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் மற்றும் சிங்கப்பூர் கல்வி அமைச்சகம் இடையே கையெழுத்தான இறுதி புரிந்துணர்வு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையேயான திறன் மேம்பாட்டு முயற்சிகளை பூர்த்தி செய்யும் வகையில், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதமர் மோடி மற்றும் லாரன்ஸ் வோங், சிங்கப்பூரில் உள்ள ஏஇஎம் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் குறைக்கடத்தி வசதியை பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “எனது நண்பரான பிரதமர் லாரன்ஸ் வோங்குடனான கலந்துரையாடல் இன்றும் தொடர்ந்தது. திறன், தொழில்நுட்பம், சுகாதாரம், ஏ.ஐ. (செயற்கை நுண்ணறிவு) மற்றும் பல துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதில் எங்கள் பேச்சுக்கள் கவனம் செலுத்தின. வர்த்தக உறவுகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை இருவரும் ஒப்புக்கொண்டோம்.

செமிகண்டக்டர்கள் மற்றும் தொழில்நுட்பம் இந்தியா - சிங்கப்பூர் ஒத்துழைப்பின் முக்கிய அம்சங்களாகும். இதுவும் இந்தியா தனது இருப்பை அதிகரித்துக் கொண்டிருக்கும் ஒரு துறையாகும். இன்று, பிரதமர் வோங் மற்றும் நான் இருவரும் ஏஇஎம் ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்குச் சென்றோம். இந்தத் துறையில் இணைந்து பணியாற்றவும், நமது இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கவும் நாங்கள் எதிர்நோக்குகிறோம்.” என தெரிவித்துள்ளார்.

# தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் ‘ட்ரில்லியன்ட்’ நிறுவனம் ரூ.2 ஆயிரம் கோடி முதலீடு நைக்கி, ஆப்டம் நிறுவனங்கள் முதலீடு செய்ய முதல்வர் நேரில் அழைப்பு

சென்னை, 05 செப் 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (4 ந் தேதி) அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், உலகின் முன்னணி காலணி மற்றும் விளையாட்டு ஆடைகள் தயாரிப்பு நிறுவனமான நைக்கி மற்றும் உலகின் முன்னணி ஹெல்த்கேர் நிறுவனமான ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

தமிழ்நாட்டில் திறன் வளர்ச்சி மிகுந்த இளைஞர்கள், பெண் கல்வி மற்றும் மேம்பாடு, உயர்கல்வியில் சாதனை, தரமான உட்கட்டமைப்பு வசதிகள் என இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு மிகவும் உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக அளவில் நிறுவனங்களை தொடங்கிடவும், தொழில் முதலீடுகளை இப்பயணத்தின் போது, முதலமைச்சர் முன்னிலையில் சான் பிரான்சிஸ்கோவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர் மற்றும் அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், ஓமியம்நிறுவனத்துடன் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன.

சிகாகோ நகரில் கடந்த 3



ந் தேதி அன்று ஈட்டன் நிறுவனத்துடன் 200 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் ஈட்டன் நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டு பொறியியல் மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், அஷ்யூரன்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

இதன்மூலம் மொத்தம் 10 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக நேற்று சிகாகோவில், ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும், நைக்கி மற்றும் ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளவும் அழைப்பு விடுத்தார். அதன் விவரங்கள் வருமாறு:

ட்ரில்லியன்ட் நிறுவனம் மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு, ஸ்மார்ட் கிரிட், ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் ஐ ஐ ஓ டி ஆகியவற்றிற்கான தீர்வுகளை வழங்கும் முன்னணி சர்வதேச நிறுவனமாகும். இந்நிறுவனம் ஆற்றல் திறன், நம்பகத்தன்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களின் ஒருங்கிணைப்பு, மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு போன்றவற்றிற்கு தீர்வுகளை வழங்குகிறது. இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின், வட கரோலினாவின் கேரியில் அமைந்துள்ளது.

முதலமைச்சர் முன்னிலையில், ட்ரில்லியன்ட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ட்ரில்லியன்ட் நிறுவனத்தின் தலைமை வணிக அலுவலர் மைக்கேல் ஜே மார்டிமர் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

நைக்கி நிறுவனம் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய விளையாட்டு காலணிகள் மற்றும் ஆடைகள் தயாரிப்பு நிறுவனமாகும். நைக்கி நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

கால்பந்து, கூடைப்பந்து, தடகளம், டென்னிஸ், அமெரிக்க கால்பந்து, கோல்ஃப், ஐஸ் ஹாக்கி போன்ற விளையாட்டிற்கான காலணிகள், ஜெர்சிகள், ஷார்ட்ஸ், கிளீட்ஸ், பேஸ்லேயர்ஸ் போன்றவை இதன் தயாரிப்பு பொருட்களில் அடங்கும்.

இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின், ஓரிகானின் பெவர்டன்னில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் நைக்கி நிறுவனம் அதன் விநியோகச் சங்கிலி விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது.

மேலும், நைக்கி நிறுவனத்தின் இரண்டு பெரிய ஒப்பந்த உற்பத்தியாளர்களான ஃபெங் டே மற்றும் பவுச்சென் மூலம் தமிழ்நாட்டில் நைகி நிறுவனம் தனது காலணி உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுக்கு 60 லட்சம் ஜோடி காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதில் 28,000 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நைக்கி நிறுவனத்தின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

முதலமைச்சர், நைகி நிறுவனத்தின் தலைமை வழங்கல் அலுவலர் வெங்கடேஷ் அழகிரிசாமி, துணைத் தலைவர்கள் கிறிஸ்டன் ஹேன்சன், ஜார்ஜ் காசிமிரோ மற்றும் உயர் அலுவலர்களுடன், தமிழ்நாட்டில் தோல் அல்லாத காலணிகளின் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், ஆடைகள் உற்பத்திக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது பற்றியும், சென்னையில் தயாரிப்பு உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு மையத்தை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், தமிழ்நாடு அரசின் முதன்மையான திறன் மேம்பாட்டு திட்டமான “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ், திறன் கூட்டாண்மையுடன் இணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

ஆப்டம் நிறுவனம் யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் துணை நிறுவனமாகும். இது அமெரிக்காவில் உள்ள ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனங்களில் முன்னணி நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் ஆப்டம் ஆர் எக்ஸ், ஆப்டம் ஹெல்த், ஆப்டம் இன்சைட் ஆகிய மூன்று வணிகங்களை மேற்கொண்டு வருகிறது. தரவு மற்றும் பகுப்பாய்வு, மருந்தக பராமரிப்பு சேவைகள், மக்கள் தொகை சுகாதாரம், சுகாதார விநியோகம் மற்றும் நடவடிக்கைகள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் தலைமையகம் அமெரிக்க நாட்டின் மினசோட்டா, ஈடன் பிரெரியில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனம் சென்னையில் 5,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் வருவாய் சுழற்சி மேலாண்மை செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் ஸ்டாலின், ஆப்டம் இன்சைட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ரோஜர் கானர், யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் முதுநிலை துணைத்தலைவர் ஜான் மியாட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, முதலமைச்சருடன் ரோஜர் கானர், தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனத்தின் தற்போதைய செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாட்டின் செழித்து வரும் சுகாதாரப் பாதுகாப்புத் துறைக்கு ஏற்ற வகையில், தொழில்துறைக்குத் தயாரான திறமைக் குழுவை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பு குறித்தும் ஆலோசித்தார்.

மேலும், இச்சந்திப்பின்போது, திறன் மேம்பாடு மற்றும் திறன்சூழலை எவ்வாறு இணைந்து செயல்படுத்துவது என்பது குறித்து முதலமைச்சர் ஸ்டாலினுடன் கலந்துரையாடியது மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்த ரோஜர் கானர், உயர் செயல்திறன் கொண்ட நவீன சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, தொடர்ந்து உலகளாவிய திறமைகளில் முதலீடு செய்து வருவதாகவும், வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் தேவைகளை சிறப்பாக பூர்த்தி செய்ய தங்கள் சேவை திறன்கள் மற்றும் செயல்திறனை மேம்படுத்தி வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சிகாகோவில் ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், நைக்கி மற்றும் ஆப்டம் நிறுவனங்களுடன் தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கூறியிருப்பதாவது:

டிரில்லியன்ட் நிறுவனம் தமிழ்நாட்டில் அதன் உற்பத்தி அலகு, வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையத்தை நிறுவிட 2 ஆயிரம் கோடி ரூபாயில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டேன். இந்த மதிப்புமிக்க கூட்டாண்மைக்கு ட்ரில்லியன்ட்டுக்கு நன்றி!

நைக் உடன் அதன் காலணி உற்பத்தியை விரிவுபடுத்துவது மற்றும் சென்னையில் ஒரு தயாரிப்பு, உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு மையம் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தையை மேற்கொண்டேன்.

ஏற்கனவே தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனத்தில் 5,000 பேர் வேலை செய்து வரும் நிலையில், அந்நிறுவனம் சுகாதாரத் துறைக்கான திறமையாளர்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. திருச்சி மற்றும் மதுரையில் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்துவது குறித்தும் பரிசீலிக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டேன். முன்னெடுப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

உள்ளது உள்ளபடி

## சாம்சங் பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் வரிசையை இந்திய நுகர்வோர்களின் தேவைகளை மேம்படுத்த மேம்பட்ட ஏ ஐ அம்சங்களுடன் அறிமுகப்படுத்துகிறது




கோயம்புத்தூர், 05 செப் 2024: இந்தியாவின் முன்னணி நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், இன்று தனது புதிய பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் தொடரை இந்தியாவில் வெளியிட்டது. பெஸ்போக் வடிவமைப்பு மற்றும் ஸ்மார்ட்டிங்ஸ் ஏ ஐ எனர்ஜி மோட், ஸ்மார்ட்டிங்ஸ் ஹோம் கேர், ஸ்மார்ட் ஃபார்வர்டு போன்ற மேம்பட்ட ஏ ஐ அம்சங்களுடன், கன்வெர்டிபிள் 5-இன்1, ட்வின் கூலிங் பிளஸ்ல் மற்றும் ஆக்டிவ் ஃப்ரெஷ் ஃபில்டர்+ ஆகியவை இந்தியர்களின் வளர்ந்து வரும் நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது. சாம்சங் பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் சீரிஸ் கண்ணாடி மற்றும் ஸ்டீல் ஃபினிஷில் கிடைக்கும், பிளாக் கிளாஸ், பிளாக் மேட், லக்ஸ் பிளாக், எலிகண்ட் ஐநாக்ஸ் மற்றும் ரீஃபைன்ட் ஐநாக்ஸ் போன்ற பல விருப்பங்களைத் தேர்வுசெய்யலாம். சாம்சங்கின் புதிய பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் சீரிஸ் மூன்று திறன்களில் கிடைக்கும் - 396லி, 419லி மற்றும் 465லி மற்றும் பெரிய சேமிப்பு திறன், வசதி மற்றும் நெகிழ்வுத்தன்மையை வழங்கும் ஆரம்ப விலை ரூபாய் 64990 இல் கிடைக்கும்.

“குளிர்சாதனப் பெட்டி வகையின் தலைவர்களாக, எங்கள் கவனம் குளிரூட்டலுக்கு அப்பாற்பட்டது - அணுகல், தகவமைப்பு மற்றும் அழகியல் வடிவமைப்பு அனைத்தையும் ஒரே நேரத்தில் வழங்குவதன் மூலம் எங்கள் சாதனங்கள் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துகின்றன. பெஸ்போக் ஏ ஐ இரட்டை கதவு குளிர்சாதன பெட்டிகள் உங்கள் உட்புறத்துடன் தடையின்றி பொருந்துகின்றன. அவை மேம்பட்ட ஏ ஐ அம்சங்கள், பெஸ்போக் வடிவமைப்பு மற்றும் பெரிய சேமிப்பக திறன் ஆகியவற்றைக் கொண்டுள்ளன, இது பயனர்களுக்கு செயல்திறன், ஆற்றல் திறன் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றின் சரியான கலவையை வழங்குகிறது," என்று சாம்சங் இந்தியாவின் டிஜிட்டல் அப்ளையன்சஸ் பிசினஸின் மூத்த இயக்குனர் சவுரப் பைஷாகியா கூறினார்.

ஸ்மார்ட் திங்ஸ் ஏ ஐ எனர்ஜி பயன்முறை ஏ ஐ எனர்ஜி மோட் குளிர்சாதனப் பெட்டியின் பயன்பாட்டு முறைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மின் பயன்பாட்டை மேம்படுத்துகிறது, இதன் விளைவாக ஆற்றல் நுகர்வு 10% வரை குறைகிறது. இந்த அறிவார்ந்த அம்சம் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துகிறது, இது சுற்றுச்சூழல் உணர்வுள்ள குடும்பங்களுக்கு சிறந்த தேர்வாக அமைகிறது. ஏ ஐ எனர்ஜி பயன்முறையானது வீட்டு உபயோகப் பொருட்களின் ஆற்றல் நுகர்வை திறம்பட நிர்வகிக்க அனுமதிக்கிறது, இது குறிப்பிடத்தக்க செலவு சேமிப்புக்கு வழிவகுக்கிறது. இந்த அம்சம் ஆற்றல் பயன்பாட்டைக் கண்காணித்து கட்டுப்படுத்துகிறது, குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட சாதனங்கள் உச்ச செயல்திறனில் செயல்படுவதை உறுதி செய்கிறது.

## பாரா ஒலிம்பிக்: தமிழகம் திரும்பிய வெற்றி வீராங்கனைகளுக்கு உற்சாக வரவேற்பு



சென்னை, 05 செப் 2024: பாராலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு தாயகம் திரும்பிய தமிழக வீரர்களுக்கு சென்னையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளி வீரர்களுக்கான 17வது பாரா ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் கடந்த ஆகஸ்ட் மாதம் 28ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் மொத்தம் 4 ஆயிரத்து 400 வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இதில் இந்தியா சார்பில் 84 பேர் கலந்துகொண்டுள்ளனர். இதன் ஒரு பகுதியாக இந்த போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் பதக்கங்களை வென்று அசத்தி வருகின்றனர். அதன்படி மகளிர் ஒற்றையர் பிரிவு பேட்மிண்டனில் தமிழகத்தைச் சேர்ந்த வீராங்கனை துளசிமதி முருகேசன் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். அதே மகளிர் ஒற்றையர் பிரிவு பேட்மிண்டனில் தமிழகத்தைச் சேர்ந்த வீராங்கனை மனிஷா ராமதாஸ் வெண்கலப் பதக்கம் வென்றார். மேலும் பேட்மிட்டன் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த நித்யஸ்ரீ சிவன் என்ற வீராங்கனையும் வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இந்நிலையில் பதக்கம் வென்று தாயகம் திரும்பிய வீராங்கனைகளான துளசிமதி முருகேசன், மனிஷா ராமதாஸ் மற்றும் நித்யஸ்ரீ சிவன் ஆகியோருக்கு சென்னை விமான நிலையத்தில் கரகாட்டம் மற்றும் ஒயிலாட்டத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் எல்.சுஜாதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு வீராங்கனைகளுக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து துளசிமதி முருகேசன் பேசுகையில், “பேட்மிட்டன் பேட்டை பிடிப்பதில் அப்பா சொல்லிக் கொடுத்ததில் இருந்து எனது கனவு பாரா ஒலிம்பிக்கில் விளையாட வேண்டும் என்பது தான். இதற்காக அப்பா நிறைய தடைகளை தாண்டி கஷ்டப்பட்டு இருக்கிறார். அதை எல்லாம் தாண்டி கனவு நிறைவேறி இருக்கிறது. அதுமட்டுமில்லாமல் சிறு வயதிலிருந்து பயிற்சி பெற்ற பெண் காஞ்சிபுரம் எஸ்.டி.டி.ஏ. ஸ்டேடியத்திலும், அரசின் எல்லா திட்டங்களாலும் அதில் பயனடைந்திருக்கிறேன். தற்போது கலநடை மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டு இருப்பதால் இரண்டு ஆண்டுகள் பயிற்சிக்காக விடுமுறை வேண்டும் என அமைச்சர் உதயநிதியைச் சந்தித்து கோரிக்கை வைத்தோம். இதற்காக அவரும், உறுப்பினர் செயலாளர் மேகநாத ரெட்டியும் அரசாணையைப் பெற்றுக் கொடுத்தனர்.

பாரா ஒலிம்பிக் வெற்றிக்குப் பின் மிகப்பெரிய குழுவினர் உள்ளனர். அப்பா, தமிழக அரசு, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என எல்லாருக்கும் சேர்த்துக் கிடைத்த வெற்றி ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள வேண்டும் என்பது கனவு. அதில் வெள்ளிப் பதக்கம் கிடைத்தது என்பது ரொம்ப பெரிய விஷயம்” எனத் தெரிவித்தார்.

மேலும் மனிஷா ராமதாஸ் பேசுகையில், “பாரா ஒலிம்பிக்கில் கலந்துகொள்ள அப்பா அம்மா நிறைய சப்போர்ட் செய்திருந்தனர். பேட்மிட்டன் விளையாட ஆரம்பித்ததில் இருந்து பாரா ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு. அவ்வாறு கலந்துகொண்ட முதல் பாரா ஒலிம்பிக்கிலேயே வெண்கலம் என்றது ரொம்ப சந்தோஷம். இதற்கு பின்னாள் அப்பா அம்மா ரொம்பவும் கஷ்டப்பட்டு உள்ளனர். ஒவ்வொரு போட்டிகளுக்கும் செலவு அதிகம். அப்படி இருந்து செலவு செய்தனர். என் வெற்றிக்கு உதவி செய்த தமிழ்நாடு அரசுக்கும், முதல்வருக்கும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் என அனைவருக்கும் நன்றி” எனத் தெரிவித்தார்.

## டாடா மோட்டார்ஸ் அதன் மிட்-எஸ்யூவி கர்வ் ஐ ரூ. 9.99 லட்சம் முதல் தொடங்கும் ஆரம்ப விலையில் அறிமுகப்படுத்துகிறது



கோயம்புத்தூர், 05 செப் 2024: இந்தியாவின் முன்னணி வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், இன்று, டாடா கர்வ் - எஸ் யூ வி கூப், வாகனத்தை ரூ. 9.99 லட்சம் ஆரம்ப விலையில் அறிமுகம் செய்வதை பெருமையுடன் அறிவித்துள்ளது. நிறுவனத்திற்கு ஒரு பெரிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், புத்தாக்கமான மற்றும் அற்புதமான பாடி ஸ்டைல்களில் ஐ சி ஈ விருப்பங்களுடன் வேகமாக வளர்ந்து வரும் மிட்-எஸ்யூவி பிரிவில் நுழைந்துள்ள டாடா மோட்டார்ஸ் கர்வ் ஐ மூன்று என்ஜின் விருப்பங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது, இவை அனைத்தும் மேம்பட்ட டூயல் கிளட்ச் தானியங்கி டிரான்ஸ்மிஷனுடன் வழங்கப்பட்டுள்ளன. சக்திவாய்ந்த புதிய ஹைபரியன் பெட்ரோல் இன்ஜெக்ஷன் இன்ஜின், 1.2லி ரெவோட்ரான் பெட்ரோல் எஞ்சின் மற்றும் புதிய 1.5லி க்ரையோஜெட் டீசல் எஞ்சின் மற்றும் டீசலில் பிரிவின் முதல் டூயல் கிளட்ச் டிரான்ஸ்மிஷனுடன், நிறுவனம் நுகர்வோருக்கு அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான ஒவ்வொன்றிலிருந்தும் தேர்வு செய்ய ஒரு நல்ல கலவையை வழங்குகிறது.

பாக்ஸி-எஸ்யூவி பாடி ஸ்டைல்கள் கொண்ட உயர் வளர்ச்சிப் பிரிவில், டாடா மோட்டார்ஸ், அதன் டி என் ஏ க்கு உண்மையாக, பிரிமியம் எஸ் யூ வி கூப் வடிவமைப்பை ஜனநாயகப்படுத்துவதன் மூலம் அந்த வகையை மேம்படுத்தியுள்ளது - இது, உலகளவில் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட பாடி ஸ்டைல் ஆகும். கர்வ் என்பது பெஸ்ட்-இன்-கிளாஸ் பாதுகாப்பு, செக்மென்ட் முதல் அம்சங்கள், பல மற்றும் தனித்துவமான பவர்டிரெய்ன் விருப்பங்களைக் கொண்ட பிரிவில் உள்ள ஒன்றாகும் - கோல்ட் எசென்ஸ், டேடோனா கிரே, ப்ரிஸ்டைன் ஒயிட், ஃபிளேம் ரெட், ப்யூர் கிரே மற்றும் ஓபரா ப்ளூ ஆகிய ஆறு வித்தியாசமான வண்ணங்களில் கிடைக்கும், டாடா கர்வ் அக்கம்பிளிஷ்டு, கிரியேட்டிவ், பியூர் மற்றும் ஸ்மார்ட் பர்ஸனாக்களில் கிடைக்கும்.

டாடா மோட்டார்ஸ் பாசஞ்சர் வெஹிக்கிள் லிமிடெட் மற்றும் டாடா பாசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிட்டி லிமிடெட் ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர் திரு. ஷைலேஷ் சந்திரா அவர்கள், "டாடா கர்வ் இன் வெளியீடு, ஆட்டோமொபைல் சிறப்பை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க பாய்ச்சலாகும், ஏனெனில் இது ஒரு புதிய எஸ் யூ விகூப் பாடி ஸ்டைலை இந்தியாவிற்குக் கொண்டுவருகிறது, இது இதுவரை உலகளவில் அங்கீகரிக்கப்பட்டு பிரீமியம் வகைகளில் மட்டுமே கிடைக்கிறது. எப்பொழுதும் செக்மென்ட் வரையறுக்கும் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் எங்கள் டி என் ஏக்கு உண்மையாக, கர்வ் தற்போது மிட்-எஸ்யூவி பிரிவில் மிகவும் தனித்துவமான சலுகையாக உள்ளது மற்றும் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தில் புதுமைக்கான எங்கள் அர்ப்பணிப்பை வெற்றிகரமாக உள்ளடக்கியது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கர்வ்.ஈ விஆனது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது மற்றும் வாடிக்கையாளர்கள் அதன் வடிவமைப்பு மற்றும் ஸ்டைல் மற்றும் சலுகையில் உள்ள உயர்நிலை அம்சங்களுடன் இணைந்துள்ளது. மேலும், தொழில்துறையில் முதன்மையானது ஈ விமற்றும் ஐ சி ஈ விலை சமநிலை அவர்களின் உணர்வுகளை சாதகமாக பாதித்துள்ளது. கர்வ் இன் அறிமுகமானது, எங்கள் எஸ் யூ விபோர்ட்ஃபோலியோவை பல பவர்ட்ரெய்ன்களுடன் கூடிய விரிவான மிட்-எஸ்யூவி தயாரிப்பாக மேலும் மேம்படுத்துகிறது, பல பிரிவுகளில் முதன்மையானது, ஒரு புத்தம் புதிய திறன் கொண்ட கட்டமைப்பு - அட்லஸ் மற்றும் லெவல் 2 அடாஸ். பேக்கேஜை இனிமையாக்க, அனைத்து வகைகளிலும் கர்வ் ஐ மிகவும் கவர்ச்சிகரமான முறையில் விலை நிர்ணயம் செய்துள்ளோம், இதனால் அனைத்து நுகர்வோர் தேவைகளுக்கும் இது தவிர்க்க முடியாததாக உள்ளது. இந்த காரை இன்று சந்தையில் அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இந்த வித்தியாசமான சலுகையை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் விரும்புவார்கள் என்று நம்புகிறோம்” என்று கூறினார்.

## ஐ.பி.எல். கிரிக்கெட்: ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பயிற்சியாளர் ஆகிறார் டிராவிட்




சென்னை, 05 செப் 2024: ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக ராகுல் டிராவிட் நியமிக்கப்படுகிறார்.

வெஸ்ட்இண்டீசில் கடந்த ஜூன் மாதம் நடந்த 9-வது 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்திய அணி, தென்ஆப்பிரிக்காவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் இந்திய அணி 11 ஆண்டுகளுக்கு பிறகு முதல்முறையாக ஐ.சி.சி. கோப்பையை கைப்பற்றியது.

உலகக் கோப்பை போட்டியுடன் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டின் பதவி காலம் முடிவடைந்தது. அவருக்கு மேலும் பதவி நீட்டிப்பு வழங்கப்படாததால் அவர் அந்த பொறுப்பில் இருந்து விலகினார். அடுத்து டிராவிட் என்ன செய்யப்போகிறார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரான 51 வயது ராகுல் டிராவிட் நியமிக்கப்பட இருக்கிறார். இது குறித்து ராஜஸ்தான் ராயல்ஸ் அணி நிர்வாகம் டிராவிட்டுடன் நடத்திய பேச்சுவார்த்தை இறுதி கட்டத்தை எட்டி விட்டதாகவும், அவர் நியமனம் குறித்து விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் இயக்குனராக இலங்கை முன்னாள் கேப்டன் குமார் சங்கக்கரா 2021-ம் ஆண்டு முதல் இருந்து வருகிறார். கடந்த சீசனில் தனியாக தலைமை பயிற்சியாளர் யாரும் நியமனம் செய்யப்படவில்லை. உதவி பயிற்சியாளர்கள் டிரோவர் பென்னி, ஷேன் பாண்ட் ஆகியோர் பயிற்சியாளர் பணியை கவனித்தனர். குமார் சங்கக்கரா தனது பதவியில் தொடருவார். இந்திய அணியின் முன்னாள் பேட்டிங் பயிற்சியாளர் விக்ரம் ரத்தோர் உதவி பயிற்சியாளராக நியமிக்கப்பட இருக்கிறார்.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கும், ராகுல் டிராவிட்டுக்கும் இடையே நீண்ட காலபந்தம் உள்ளது. அவர் 2012, 2013-ம் ஆண்டுகளில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் கேப்டனாக இருந்தார். அடுத்த இரு ஆண்டுகள் அந்த அணியின் ஆலோசகராக பணியாற்றினார். அதன் பிறகு அவர் 2016-ம் ஆண்டு டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிக்கு ஆலோசகராக மாறினார். பின்னர் 2019 முதல் 2021-ம் ஆண்டு வரை பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியின் தலைவராக இருந்தார். 2021-ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியை ஏற்றார். அந்த பதவி காலம் முடிந்ததை அடுத்து தற்போது அவர் மீண்டும் ராஜஸ்தான் அணிக்கு திரும்புகிறார்.


தொடக்க ஐ.பி.எல். போட்டியில் (2008-ம் ஆண்டு) கோப்பையை உச்சி முகர்ந்த ராஜஸ்தான் ராயல்ஸ் அதன் பிறகு கோப்பையை வென்றதில்லை. கடந்த சீசனில் சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் அணி 2-வது தகுதி சுற்றில் தோல்வி கண்டு வெளியேறியது நினைவுகூரத்தக்கது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# டிவிஎஸ் ரேசிங் இந்திய தேசிய ரேலி சாம்பியன்ஷிப்பின் இறுதிச் சுற்றில் ஆதிக்கம் : டிவிஎஸ் அப்பாச்சி ஆர்டிஆர் தொடர்ந்து 10-வது முறையாக வெற்றி பெற்றிருக்கிறது!




சென்னை, 05 செப் 2024: டிவிஎஸ் ரேசிங் அணி, இந்திய இரு சக்கர வாகனப் பந்தயத் துறையில் சாதனைகளைப் படைப்பதில் புதிய வரையறைகளை உருவாக்கி வருகிறது. நாற்பது ஆண்டுகளாக பந்தயத்தில் தடம் பதித்திருக்கும் பாரம்பரியம் மற்றும் சாகசமிக்க குணாதிசயத்தின் வெளிப்பாடாக, சமீபத்தில் முடிவடைந்த இந்திய தேசிய ரேலி சாம்பியன்ஷிப் 2024-ல் அபாரமான செயல்திறனை வெளிப்படுத்தி இருக்கிறது டிவிஎஸ் ரேசிங் அணி. கோயம்புத்தூரில் நடைபெற்ற இறுதிப் பந்தயத்தின் மூன்று பிரிவுகளிலும் இந்த அணி முக்கிய இடங்களைப் பெற்று, ரேசிங்கில் தவிர்க்கவே முடியாத வெற்றியாளர்களாக உருவெடுத்தது, மேலும் பந்தயத்தில் நிபுணத்துவமிக்க தனது பாரம்பரியத்தைத் தொடர்வதோடு, இந்திய மோட்டார்ஸ்போர்ட்டில் ஆதிக்கம் செலுத்தும் அதிகார மையங்களில் ஒன்றாக முக்கியத்துவம் பெற்றிருப்பதை இந்த வெற்றிகள் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. டிவிஎஸ் ரேசிங், இந்தியாவில் மோட்டார்ஸ்போர்ட்டை அனைவருக்குமான ஒரு சாகசப் போட்டியாக மாற்றுவதில் மிகவும் உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து அனைத்து பந்தயங்களிலும் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக்கூடிய வகையில் 80% வெற்றி விகிதத்தை தன் வசம் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. குரூப் பி 260சிசி, குரூப் ஏ 500சிசி மற்றும் ஸ்கூட்டர் பிரிவுகளில் முதன்மையான இடங்களைப் பிடித்திருப்பதன் மூலம் டிவிஎஸ் ரேசிங் அணியின் ஆதிக்கம் தெளிவாகத் தெரிகிறது. மேலும் டிவிஎஸ்ஸ் ரேசிங் பெற்றிருக்கும் இந்த வெற்றிகள் அதன் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவது மட்டுமல்லாமல், அதன் பந்தய வீரர்களின் அசாத்திய திறமையையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றிகளும், பந்தய வீரர்களின் திறமைகளும், தொழில்நுட்ப அம்சங்களும் டிவிஎஸ் ரேசிங்கின் வெற்றிகரமான பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்திருக்கின்றன.

இந்திய தேசிய ரேலி சாம்பியன்ஷிப் போட்டி வரலாற்றில், டிவிஎஸ் ரேசிங் தொடர்ந்து தனது அபாரமான செயல்திறனில் பல புதிய எல்லைகளை விரிவுப்படுத்திக் கொண்டே வந்திருக்கிறது. வரம்புகளைத் தள்ளியுள்ளது. சமீபகால வெற்றிகளுடன், க்ரூப் பி 260சிசி க்ளாஸ்-ல் தொடர்ந்து 10-வது முறையாக பட்டத்தை வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்திய மோட்டார்ஸ்போர்ட்டில் தடுக்க முடியாத சக்தியாக உருவெடுத்திருப்பதோடு, தனது பெயருக்கென நம்பகத்தன்மையையும், கௌரவத்தையும் தக்க வைத்திருக்கிறது.

விழாவில் பேசிய டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் பிரீமியம் பிரிவின் தலைமை வணிக அதிகாரி திரு விமல் சும்ப்லி கூறுகையில், "டி வி எஸ் அப்பாச்சி வாகன வரிசையில், தரத்திற்கும், நிபுணத்துவத்திற்கும் உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகளாக இருப்பதோடு, இடைவிடாமல் தொடர்ந்து புதுமைகளை ஊக்குவிப்பதும், உயரிய தரங்களைத் தொடர்ந்து மேம்படுத்தி வருவதும் ஈடுஇணையில்லாத தயாரிப்பாக முன்னிறுத்தி இருக்கின்றன. இந்த சீசனில் எங்களுடைய அணியின் சிறப்பான ஆட்டம் 2024-ல் அனைத்துப் பிரிவுகளிலும் எங்களது வெற்றிப் பயணத்தை மேலும் விரிவுபடுத்தி இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, □□திறமைகளை அடையாளம் கண்டு வளர்த்தெடுப்பதில் எங்களது அணி காட்டிவரும் அர்ப்பணிப்பு தொடர்ந்து அருமையான முடிவுகளைப் பெற்று தரும் என்று நான் நம்புகிறேன்." என்றார்.

டி வி எஸ் எம் மோட்டார்ஸ்போர்ட்ஸ் மீது கொண்டிருக்கும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்று தந்துள்ளது. அதேநேரம் டி வி எஸ் ரேசிங், சிறந்த பந்தய வீரர்களை அடையாளம் கண்டு வளர்த்தெடுப்பதிலும், உயர் செயல்திறன் கொண்ட டி வி எஸ் அப்பாச்சி வரிசை வாகனங்களை நவீனமாக வடிவமைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. அசத்தலான பிரீமியம் தரம், அபாரமான செயல்திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களில் தனது கவனத்தை கொண்டிருப்பதால் இந்த பிராண்ட் உலகளவில் 5.5 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைப் பெற்றிருக்கும் முன்னணி நிறுவனமாக திகழ்கிறது. மேலும், இந்த பிரிவில் மிக வேகமாக வளர்ச்சிக் கண்டு வரும் பிராண்டாக தனது செயல்பாட்டை உறுதிப்படுத்தி இருக்கிறது.

# இந்திய வர்த்தக ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்வதற்கான சரியான வழி ஆர் ஈ ஐ டி-கள்




சென்னை, 05 செப் 2024: 2019 ஆம் ஆண்டு முதல் ரூ.18,300 கோடிக்கும் அதிகமாக இந்திய ஆர் ஈ ஐ டி-கள் ஆல் விநியோகிக்கப்பட்டுள்ளன, இது முழு ஒருங்கிணைந்த நிஃப்டி ரியால்ட்டி இண்டெக்ஸை விட அதிகம் ஆகும். தொழில்முறை குழுக்களால் நிர்வகிக்கப்படும் வணிக ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்வதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் எளிதில் பணமாக்கத்தக்க வழியாகும். வெறும் ஐந்து ஆண்டுகளில், ஒரு தொற்று பரவல் வழியாக பயணித்தபோதும் மற்றும் குறிப்பிடத்தக்க சந்தை ஏற்ற இறக்கம் இருந்தபோதிலும் ரியல் எஸ்டேட் இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட்ஸ் (ஆர் ஈ ஐ டி-கள்) நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

இன்று, நான்கு ரியல் எஸ்டேட் இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட்கள் (ஆர் ஈ ஐ டி-கள்) , ரூ.90,000 கோடிக்கு மேல் பங்குச் சந்தை மூலதனத்தைக் கொண்டு, 125 மில்லியன் சதுர அடி வணிக சொத்தை உள்ளடக்கி, இந்திய அலுவலகம் மற்றும் சில்லறை வணிகத் துறைகளில் பரவியுள்ளன.

இந்த இந்திய ஆர் ஈ ஐ டி சொத்து வகுப்பானது, 2019 முதல் ரூ.18,300 கோடிகளுக்கும் அதிகமான விநியோகங்களைக் கண்டுள்ளது.

இது முழு நிஃப்டி ரியால்ட்டி குறியீட்டை உருவாக்கும் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் செலுத்தும் மொத்த ஈவுத்தொகையை விட அதிகம்.

இந்திய சந்தையில் முதல் பட்டியலிடப்பட்ட ஆர் ஈ ஐ டி நிறுவனமான எம்பஸி ஆர் ஈ ஐ டி மட்டும் ஏப்ரல் 2019 இல் அது பட்டியலிடப்பட்டதில் இருந்து ரூ.10,000 கோடிகளுக்கு மேல் விநியோகித்துள்ளது மற்றும் அதன் சில்லறை யூனிட் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 100,000 முதலீட்டாளர்களுக்கும் அதிகமாக வளர்ந்துள்ளதைக் கண்டுள்ளது.

அதன் பரந்த சந்தை அளவு, சாதகமான மக்கள்தொகை மற்றும் விரைவான நகரமயமாக்கல் ஆகியவற்றுடன், இந்தியா, ரியல் எஸ்டேட் முதலீட்டிற்கு, குறிப்பாக ஆர் ஈ ஐ டி-கள் களுக்கு மகத்தான வாய்ப்புகளை வழங்குகிறது. உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்களுக்கான ஒரு பணியமர்த்தும் இடமாக இந்தியா தொடர்ந்து இருப்பதால், இந்திய நுகர்வோரின் வாங்கும் திறன் தொடர்ந்து அதிகரித்து வருவதால், இந்தியாவின் வணிக ரியல் எஸ்டேட் துறையின் மீட்சி மற்றும் சாத்தியம் மற்றும் ஆர் ஈ ஐ டி சொத்து வகுப்பின் வளர்ந்து வரும் பிரபலம் ஆகியவை எப்போதும் அதிக வெளிப்படையாக இருந்ததில்லை வரலாற்று ரீதியாக, இந்திய ரியல் எஸ்டேட் பணப்புழக்கமற்றதாக இருந்து வருகிறது மற்றும் முதன்மையாக குடியிருப்புகளை மையமாகக் கொண்டது மற்றும் பெருநிறுவன நிர்வாகத்தில் மோசமாக செயல்பட்டது.

ஆர் ஈ ஐ டி-கள் அந்த கண்ணோட்டங்களை முற்றிலும் மாற்றிவிட்டன. பொதுவில் வர்த்தகம் செய்கின்ற யூனிட் மூலம், சில்லறை முதலீட்டாளர்களுக்கு உண்மையான ரியல் எஸ்டேட் சொத்தை சொந்தமாக வாங்க, வைத்திருக்க மற்றும் பராமரிக்க தேவையின்றி வணிக ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்வதற்கு ஒரு சிறந்த முதலீட்டு பயணத்தை ஆர் ஈ ஐ டி-கள் வழங்குகின்றது. வருமானம் ஈட்டும் சொத்துக்களில் குறைந்தபட்சம் 80% சொத்துக்களை அவர்கள் சொந்தமாக்கவும் வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் 90% பணப்புழக்கங்களை அரை ஆண்டுக்கு ஒரு முறை கட்டாயம் செலுத்த வேண்டும்.

எம்பஸி ஆர் ஈ ஐ டி நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி அபிஷேக் அகர்வால் கூறும்பொழுது, "ஆர் ஈ ஐ டி-கள் சில்லறை முதலீட்டாளர்களுக்கு பணமாக்கத்தக்க, வெளிப்படையான மற்றும் அதிக ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவத்தில் இரண்டு சக்திவாய்ந்த வழிகளில் கிரேடு ஏ வணிக ரியல் எஸ்டேட்டுக்கான வெளிப்படுத்தலை வழங்குகின்றன. முதலாவதாக, ஆர் ஈ ஐ டிகள் தங்கள் யூனிட் வைத்திருப்பவர்களுக்கு நிகர விநியோகிக்கக்கூடிய பணம் செலுத்துதல்களில் குறைந்தது 90% செலுத்த வேண்டும். எனவே, முதலீட்டாளர்கள் விநியோகங்கள் மூலம் நிலையான வருமானத்தைப் பெறுகிறார்கள். இரண்டாவதாக, ஆர் ஈ ஐ டி-கள் , காலி இடத்தைக் குத்தகைக்கு விடுதல், வாடகை ஏற்றங்கள் மற்றும் சந்தை வாடகை அல்லது அதற்கு மேல் குறிப்பிடத்தக்க வாடகை மாற்றங்களின் மூலம் வலுவான உட்பொதிக்கப்பட்ட வளர்ச்சி சாத்தியத்தை கொண்ட உயர் டிவிடெண்ட் பங்குகளாக இருப்பதால் முதலீட்டாளர்கள் மூலதன மதிப்புயர்வையும் பெறுகிறார்கள்,." என்று கூறினார். ஆர் ஈ ஐ டி சந்தையின் எதிர்காலம் மிகவும் நம்பிக்கைக்குரியதாக இருக்கிறது. ஆர் ஈ ஐ டி விநியோகங்களின் வரிச் செயல்திறன் மற்றும் அவற்றின் கட்டுப்படியாகும் திறன் ஆகியவற்றின் மூலம் ஒரு யூனிட் ஒன்றுக்கு ரூ.150 - ரூ.400 வரை குறைந்த விலையில் ஆர் ஈ ஐ டி இன் வெறும் ஒரு பங்கை ஒரு தனி நபர் வாங்க முடியும். அத்தகைய உயர்தர வணிக ரியல் எஸ்டேட்டை அவர்கள் நேரடியாகவோ அல்லது ஒரு பகுதி உரிமை / அடுக்கு அமைப்பு மூலம் வாங்கினால் தேவைப்படும் ஒரு சில லட்சங்களில் இருந்து சில கோடிகளுக்கு மாறாக ஒருவர் செய்ய வேண்டிய குறைந்தபட்ச முதலீடான ஒரு சில நூறு ரூபாய்களில் மட்டுமே ரியல் எஸ்டேட் வாங்குவது எவ்வளவு நல்லதாக இருக்கிறது. அதனால்தான் இந்தியாவின் வணிக ரியல் எஸ்டேட் வளர்ச்சி வரலாற்றில் பங்குபெற சில்லறை முதலீட்டாளர்களுக்கு இந்த சிறந்த வாய்ப்பை ஆர் ஈ ஐ டி-கள் வழங்குகின்றன.

# வில்வித்தையில் ஹர்வீந்தர் சிங் சாதனை பாரா ஒலிம்பிக்: 5-வது தங்கப் பதக்கத்தை வென்ற இந்தியா



சென்னை, 05 செப் 2024: பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்தியா 5வது தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான 17-வது பாரா ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்து வருகிறது. இதில் உலகம் முழுவதும் இருந்து 4,400 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா சார்பில் 84 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். நேற்று நடைபெற்ற ஆண்கள் கிளப் எறிதல் எப். 51 (பதக்க சுற்று) போட்டியில் இந்திய வீரர் தரம்பிர் 34.92 மீட்டர் தூரம் வீசி தங்கப் பதக்கத்தை வென்றார். மற்றொரு இந்திய வீரர் பிரணவ் சூர்மா 34.59 மீட்டர் தூரம் வீசி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

முன்னதாக ஆண்கள் வில்வித்தை இறுதிப்போட்டியில் போலந்து வீரர் லூகாஸ் சிசெக்கை 6- 0 என்ற கணக்கில் வீழ்த்தி இந்திய வீரர் ஹர்வீந்தர் சிங் வெற்றி பெற்றார். இதன் மூலம் பாரா ஒலிம்பிக் வில்வித்தையில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை ஹர்வீந்தர் சிங் படைத்துள்ளார்.

இதன் மூலம் 2024 பாரீஸ் பாரா ஒலிம்பிக்கில் இந்தியா இதுவரை 5 தங்கம், 9 வெள்ளி, 10 வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களை வென்றுள்ளது. அதோடு, பதக்கப்பட்டியலில் ஜப்பானை (21 பதக்கங்கள்) பின்னுக்கு தள்ளி இந்தியா 13 இடத்திற்கு முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் ஒலி மாசு ஏற்படுவதை தடுக்க புதிய போக்குவரத்து நடைமுறை

சென்னை, 05 செப் 2024: ஒலி மாசு ஏற்படுவதை தடுக்க, சென்னையில் புதிய போக்குவரத்து நடைமுறை கொண்டுவரப்படுகிறது.

நாட்டின் பிற மெட்ரோ நகரங்களில் பின்பற்றப்படும் நடைமுறையை சென்னை போக்குவரத்து காவல்துறையும் பின்பற்ற உள்ளது. அதன்படி, ஒலியை அளவிடும் டெசிமல் மீட்டர்களை போக்குவரத்து சிக்னல்களுடன் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது. சிக்னல்களில் நிற்கும் வாகன ஓட்டிகள் தொடர்ந்து ஹாரன் அடித்து கொண்டே இருக்கும் பட்சத்தில், ஒலி மாசு அனுமதிக்கப்பட்ட அளவை தாண்டினால், சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்து கொண்டே இருக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்டமாக சென்னையில் இதனை நடைமுறைப்படுத்த தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் பரிந்துரையின் பேரில் ரூ.50 லட்சம் ஒதுக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நடைமுறை படிப்படியாக மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வாகனங்களில் ஒலி அளவு அதிகமாக இருப்பதை கண்டுபிடிப்பதற்கு போக்குவரத்து காவலர்களுக்கு இயர் பிளக் வழங்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளன.

## சாம்சங் பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் வரிசையை இந்திய நுகர்வோர்களின் தேவைகளை மேம்படுத்த மேம்பட்ட ஏ ஐ அம்சங்களுடன் அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 05 செப் *2024:* இந்தியாவின் முன்னணி நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், இன்று தனது புதிய பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் தொடரை இந்தியாவில் வெளியிட்டது. பெஸ்போக் வடிவமைப்பு மற்றும் ஸ்மார்ட்டிங்ஸ் ஏ ஐ எனர்ஜி மோட், ஸ்மார்ட்டிங்ஸ் ஹோம் கேர், ஸ்மார்ட் ஃபார்வர்டு போன்ற மேம்பட்ட ஏ ஐ அம்சங்களுடன், கன்வெர்டிபிள் 5-இன்1, ட்வின் கூலிங் பிளஸ்ல் மற்றும் ஆக்டிவ் ஃப்ரெஷ் ஃபில்டர்+ ஆகியவை இந்தியர்களின் வளர்ந்து வரும் நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது. சாம்சங் பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் சீரிஸ் கண்ணாடி மற்றும் ஸ்டீல் ஃபினிஷில் கிடைக்கும், பிளாக் கிளாஸ், பிளாக் மேட், லக்ஸ் பிளாக், எலிகண்ட் ஐநாக்ஸ்




மற்றும் ரீஃபைன்ட் ஐநாக்ஸ் போன்ற பல விருப்பங்களைத் தேர்வுசெய்யலாம். சாம்சங்கின் புதிய பெஸ்போக் ஏ ஐ டபுள் டோர் ரெஃப்ரிஜிரேட்டர் சீரிஸ் மூன்று திறன்களில் கிடைக்கும் - *396*லி, *419*லி மற்றும் *465*லி மற்றும் பெரிய சேமிப்பு திறன், வசதி மற்றும் நெகிழ்வுத்தன்மையை வழங்கும் ஆரம்ப விலை ரூபாய் *64990* இல் கிடைக்கும்.

“குளிர்சாதனப் பெட்டி வகையின் தலைவர்களாக, எங்கள் கவனம் குளிரூட்டலுக்கு அப்பாற்பட்டது - அணுகல், தகவமைப்பு மற்றும் அழகியல் வடிவமைப்பு அனைத்தையும் ஒரே நேரத்தில் வழங்குவதன் மூலம் எங்கள் சாதனங்கள் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துகின்றன. பெஸ்போக் ஏ ஐ இரட்டை கதவு குளிர்சாதன பெட்டிகள் உங்கள் உட்புறத்துடன் தடையின்றி பொருந்துகின்றன. அவை மேம்பட்ட ஏ ஐ அம்சங்கள், பெஸ்போக் வடிவமைப்பு மற்றும் பெரிய சேமிப்பக திறன் ஆகியவற்றைக் கொண்டுள்ளன, இது பயனர்களுக்கு செயல்திறன், ஆற்றல் திறன் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றின் சரியான கலவையை வழங்குகிறது," என்று சாம்சங் இந்தியாவின் டிஜிட்டல் அப்ளையன்சஸ் பிசினஸின் மூத்த இயக்குனர் சவுரப் பைஷாகியா கூறினார்.

ஸ்மார்ட் திங்ஸ் ஏ ஐ எனர்ஜி பயன்முறை ஏ ஐ எனர்ஜி மோட் குளிர்சாதனப் பெட்டியின் பயன்பாட்டு முறைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மின் பயன்பாட்டை மேம்படுத்துகிறது, இதன் விளைவாக ஆற்றல் நுகர்வு 10% வரை குறைகிறது. இந்த அறிவார்ந்த அம்சம் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துகிறது, இது சுற்றுச்சூழல் உணர்வுள்ள குடும்பங்களுக்கு சிறந்த தேர்வாக அமைகிறது. ஏ ஐ எனர்ஜி பயன்முறையானது வீட்டு உபயோகப் பொருட்களின் ஆற்றல் நுகர்வை திறம்பட நிர்வகிக்க அனுமதிக்கிறது, இது குறிப்பிடத்தக்க செலவு சேமிப்புக்கு வழிவகுக்கிறது. இந்த அம்சம் ஆற்றல் பயன்பாட்டைக் கண்காணித்து கட்டுப்படுத்துகிறது, குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட சாதனங்கள் உச்ச செயல்திறனில் செயல்படுவதை உறுதி செய்கிறது.

## சென்னையில் நடைபெறும் அழகுசாதன பொருட்கள் கண்காட்சியில் புதுமையான தீர்வுகளை காட்சிப்படுத்தும் கேலக்ஸி சர்பாக்டண்ட்ஸ்

சென்னை, 05 செப் *2024:* கேலக்ஸி சர்பாக்டண்ட்ஸ் நிறுவனமானது வீடு மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு துறையில் பயன்படுத்தப்படும் செயல்திறன் சர்பாக்டான்ட்கள் மற்றும் சிறப்பு பராமரிப்பு பொருட்கள் ஆகியவற்றின் முன்னணி உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். இந்நிறுவனமானது அழகுசாதன பொருட்கள் கண்காட்சியில் பங்கேற்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. அழகுசாதன பொருட்கள், மூலப்பொருட்கள், வீட்டு பராமரிப்புக்கான ஃபார்முலா, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் தனிப்பட்ட பராமரிப்புத் தொழில்களுக்கான தென்னிந்தியாவின் முதல் வர்த்தக கண்காட்சி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வு ஆகஸ்ட் *30* முதல் *31, 2024* வரை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வின் போது, கேலக்ஸி சர்பாக்டண்ட்ஸ் ஆனது புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களுடன் இணைந்திருக்கும். அதோடு, நிறுவனத்தின் புதுமையான தீர்வுகளை வீடு மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தேவைகளுக்கு ஏற்றவாறு காட்சிப்படுத்தும்.

நிறுவனமானது தனது சமீபத்திய கண்டுபிடிப்புகளை பங்கேற்பாளர்களுக்கு வெளியிட உள்ளது, வீடு மற்றும் தனிப்பட்ட பராமரிப்புத் துறைகளில் பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் நிலையான தீர்வுகளுக்கான நுகர்வோரின் வளர்ந்து வரும் கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய அவர்களின் புதிய தயாரிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு, வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட தயாரிப்புகளை உருவாக்க உதவும் தனிப்பயனாக்கக்கூடிய ஃபார்முலாக்கள், தொழில்நுட்ப நிபுணத்துவம், ஒழுங்குமுறை வழிகாட்டுதல் மற்றும் பிற சேவைகள் பற்றிய நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வதற்காக நிறுவனத்தின் பிரதிநிதிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கண்காட்சியில் சந்திப்பார்கள்.

கண்காட்சி தவிர, கேலக்ஸி சர்பாக்டண்ட்ஸ் நிறுவனத்தின் வீட்டு பராமரிப்பு குழு தொழில்நுட்ப கருத்தரங்கில் பங்கேற்கும். அங்கு அவர்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட துணி பராமரிப்பு மூலப்பொருளை வழங்குவார்கள். இந்த மூலப்பொருள் நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது, இது துணி பராமரிப்புக்கான நிலையான மற்றும் பாதுகாப்பான தீர்வை வழங்குகிறது.

கேலக்ஸி சர்பாக்டான்ட்ஸ் பிசினஸ் கிரியேஷன் துணைத் தலைவர் திரு. யோகேஷ் கல்ரா கூறுகையில், “வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சிக்கான எங்கள் அர்ப்பணிப்புடன், கேலக்ஸி நிறுவனமானது பல்வேறு பிராந்தியங்களில் இருக்கும் எங்கள் வாடிக்கையாளர்களை சந்திக்க உலகம் முழுவதும் பல்வேறு வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்கிறது. ஒப்பனை பொருட்கள் கண்காட்சியில் நாங்கள் பங்கேற்பது எங்கள் அர்ப்பணிப்புக்கு சான்றாகும், மேலும் இது எங்கள் வாடிக்கையாளரின் துடிப்பைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களின் வணிகத்தில் சிறந்து விளங்குவதற்கு புதுமையான தீர்வுகளை வழங்குவதற்கும் எங்களுக்கு உதவும். இந்தியாவில் வீடு மற்றும் தனிப்பட்ட பராமரிப்புத் துறையுடன் சிறப்பு இரசாயன சந்தையும் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது, இது நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் புதுமையான, நிலையான தயாரிப்புகளுக்கான தேவை ஆகியவற்றால் இயக்கப்படுகிறது” என்றார்.

## மாண்ட்ரா எலக்ட்ரிக் எனும் மின்சார சிறிய வணிக வாகனங்களை (எஸ் சி வி) அறிமுகப்படுத்தும் முருகப்பா குழுமம்

சென்னை, 05 செப் *2024:* ஆண்டுகால பாரம்பரியமிக்க நிறுவனமான முருகப்பா குழுமத்தின் ஈ வி பிராண்டான மாண்ட்ரா எலக்ட்ரிக் (மாண்ட்ரா எலக்ட்ரிக்) தங்கள் ஈ-எஸ் சி வியை வரும் மாதங்களில் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. ஈ-எஸ் சி வி இன் அறிமுகமானது, மின்சார சிறிய வணிக வாகனத் துறையில் நிறுவனத்தின் நுழைவைக் குறிக்கும். அறிமுகப்படுத்தப்பட்டதும், இந்த வாகனம் இந்தியாவின் மிட்-மைல் மற்றும் லாஸ்ட்-மைல் மொபிலிட்டி துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் தனித்துவமான வடிவமைப்பு, வலுவான செயல்திறன் மற்றும் நீடித்த கட்டுமானத் தரம் நிச்சயம் வாடிக்கையாளர்களை மிரளச் செய்யும். மாண்ட்ரா எலக்ட்ரிக் எஸ் சி வி - யின் வளர்ச்சியானது அதிநவீன பொன்னேரி ஆலையில் விரிவான ஆராய்ச்சி மற்றும் சோதனையின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு விருப்பமான தேர்வாக மாறுவதை உறுதி செய்வதற்காக சந்தை இடைவெளிகள் மற்றும் வாடிக்கையாளர் கருத்துக்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டது.




டி ஐ க்ளீன் மொபிலிட்டியின் (டி ஐ சி எம் பி எல்) துணை நிறுவனமான டி ஐ வோல்ட் எலக்ட்ரிக் வாகனங்கள் ஆனது எலக்ட்ரிக் ஸ்மால் கமர்ஷியல் மற்றும் லைட் கமர்ஷியல் வாகனப் பிரிவில் கவனம் செலுத்துவதன் மூலம் இந்தியாவில் நகர்ப்புற போக்குவரத்தில் மாற்றம் கொண்டுவருவதை இலக்காகக் கொண்டுள்ளது. நகர்ப்புற இயக்கத்தில் புரட்சியை ஏற்படுத்தும் ஒரு முக்கிய பார்வையுடன், டி ஐவோல்ட் ஆனது தூய்மையான, திறமையான வாகனங்களுக்கான வளர்ந்து வரும் தேவையை நிவர்த்தி செய்யும் அதே வேளையில் வாடிக்கையாளர் லாபத்திற்கு முன்னுரிமை அளிக்கும் புதுமையான மற்றும் நிலையான போக்குவரத்து தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முயற்சியானது போக்குவரத்து நிலப்பரப்பை மறுவடிவமைப்பதிலும், பொருளாதார வளர்ச்சிக்கு மேம்படுத்துவதிலும் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்க உறுதிபூண்டுள்ளது. மின்சார சிறிய வர்த்தக வாகனங்களில் கவனம் செலுத்துவதன் மூலம், டி ஐவோல்ட் இன் அணுகுமுறை வணிக வெற்றியை அடைவதோடு மட்டுமல்லாமல் சமூகங்கள் மற்றும் சுற்றுச்சூழலின் நல்வாழ்வுக்கும் பங்களிக்கும் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

டி ஐவோல்ட் தலைமை நிர்வாக அதிகாரி திரு. சஜு நாயர் கூறுகையில், "டி ஐவோல்ட் ஆனது சுற்றுச்சூழலுக்கு உகந்த இயக்கத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது, இது வளர்ச்சி மற்றும் புதுமைகளின் புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்துகிறது. எலக்ட்ரிக் வாகனத் தொழில் உலக அளவிலும் இந்தியாவிலும் ஒரு அற்புதமான கட்டத்தில் நுழைவதால், இந்தத் தயாரிப்பை மேம்படுத்துவதில் எங்களின் சிறந்த முயற்சிகளை முதலீடு செய்துள்ளோம், அதன் வெளியீட்டை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாண்ட்ரா எலக்ட்ரிக் இல், எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் எங்கள் வணிகத்திற்கும் பயனளிக்கும் நடைமுறை மற்றும் நிலையான தீர்வுகளை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். டி ஐவோல்ட் ஈ-எஸ் சி வி மூலம், கார்பன் நடுநிலைமைக்கான உலகளாவிய விதிமுறைக்கு பங்களித்து, குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் மேம்பாட்டை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

எலக்ட்ரிக் எஸ்சிவி பிரிவு குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டுள்ளது, *2070*க்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இறுதியாக, தொழில்துறை முன்னோடிகளாகவும், பெருமை வாய்ந்த இந்திய நிறுவனமாகவும், நிலையான எதிர்காலத்திற்கான அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையை ஆதரிப்பதில் பெருமை கொள்கிறோம்." என்றார். சிறிய வணிக வாகனத் துறையை மாற்றுவதற்கு டி ஐவோல்ட் இன் அர்ப்பணிப்பு வெறும் தயாரிப்பு மேம்பாட்டிற்கு அப்பாற்பட்டது; இது நிலையான மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய போக்குவரத்து தீர்வுகளை நோக்கிய ஒரு முன்னுதாரண மாற்றத்தை பிரதிபலிக்கிறது. மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் சந்தை நுண்ணறிவுகளை மேம்படுத்துவதன் மூலம், இந்தியாவில் சிறிய வணிக வாகனங்களின் பரிணாம வளர்ச்சியை முன்னோக்கி செலுத்தி, தொழில்துறையில் சிறந்து விளங்குவதற்கான புதிய சாதனைகளை அமைக்க டி ஐவோல்ட் முயற்சிக்கிறது. இடைவிடாத கண்டுபிடிப்புகள் மற்றும் வாடிக்கையாளர் திருப்திக்கான இடைவிடாத அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம், டி ஐவோல்ட் ஆனது இந்திய சந்தையில் சிறிய வணிக வாகனங்கள் பிரிவில் புரட்சியை ஏற்படுத்த தயாராக உள்ளது.

## சிங்கப்பூரில் முதலாவது திருவள்ளுவர் கலாச்சார மையம்: மோடி அறிவிப்பு

சென்னை, 05 செப் *2024:* முதலாவது திருவள்ளுவர் கலாச்சார மையம் சிங்கப்பூரில் அமைக்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

திருக்குறளின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பும் வகையில், திருவள்ளுவர் கலாச்சார மையங்கள் அமைக்கப்படும் என்று பிரதமர் மோடி, தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்தார். அதன்படி தற்போது அரசு முறை பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமர் லாரன்ஸ் வோங்கிடம், முதலாவது திருவள்ளுவர் கலாச்சார மையத்தை சிங்கப்பூரில் அமைப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த மையம் மூலம், திருக்குறள் சிறப்பு, தமிழ் மொழியின் இலக்கிய வளம், கலாச்சார சிறப்புகள் குறித்து வெளிப்படுத்தும் வகையில் நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'சிங்கப்பூரில் தமிழ் மொழி, நாகரிகம், பண்பாடு, இவற்றை வளர்க்கவும், பேணி காக்கவும், திருவள்ளுவர் கலாச்சார மையம் ஒன்றை நிறுவ உள்ளதாக அறிவித்தமைக்கு பிரதமர் மோடிக்கு நன்றி' என குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் கலாச்சார மையம் அமைப்பதற்கு சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். தமிழகத்திலும் பல்வேறு தரப்பினர் மத்தியில் இருந்தும் வரவேற்பும், பாராட்டும் குவிந்து வருகிறது.